28.11.2022
O.S.No.80/2020

வா.சா.2.திரு.சேதுபதி த.பெ.வப்பியதேவன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தைக்கு நாங்கள் தான் வாரிசு என கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தைக்கு 2 மனைவிகள். மூத்த மனைவி பெயர் தொட்டிச்சி. 2வது மனைவி பெயர் சரஸ்வதி. எனது தாயார் பெயர் தொட்டிச்சி. என்னுடன் பிறந்தவர்கள் சுகுமாறன் மற்றும் திருப்பதி ஆகியோர்கள் ஆவார்கள். சுகுமாறன் இறந்து போய்விட்டார். சுகுமாறன் இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்துள்ளேன். என் தாயார் 1973ம் ஆண்டு இறந்து விட்டார். எனது தாயாரின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தையின் 2வது மனைவி சரஸ்வதிக்கு 2 பெண் குழந்தைகள் உண்டு. அவர்கள் தொட்டிச்சி மற்றும் கிருஷ்ணவேனி ஆவார்கள். எனது தந்தையின் பெற்றோர்கள் ரொம்ப காலத்திற்கு முன்பே இறந்து விட்டார்கள். எனது தந்தையார் எனது வீடான மாங்குளத்தில் வைத்து இறந்து விட்டார். எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் நான் தாக்கல் செய்துள்ளேன். சுகுமாறனுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் அவருக்கு திருமணம் ஆகி 2 ஆண் குழந்தைகள் உள்ளன. சுகுமாறனின் மனைவி புவனேஸ்வரி உயிருடன் தான் உள்ளார். சுகுமாறனின் குழந்தைகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததாலும், எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்பதாலும் நான் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.